[2009 பிப்ரவரி 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

மானியம்

***19468—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு மீன் கண்டுபிடிக்கும் கருவியை மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மீனவர்கள் மீன் பிடிக்கின்றபோது மீன்கள் கூட்டமாக இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும் கருவியை முழு மானிய விலையில் வழங்குவதற்கானத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் தொழிலைச் செய்யும் மீனவர்கள் தினமும் மீன்பிடிப் படகுகள்மூலம் பல மைல்கள் கடலுக்குள் சென்று வலை விரித்தாலும் சில நாட்கள் மீன்கள் கிடைக்காமல் திரும்புவது வாடிக்கையாக உள்ளது. மீன்கள் கண்டுபிடிக்கும் கருவியைக்கொண்டு, மீன்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து மீன்களைப் பிடிக்க உதவுகின்ற வகையிலே, முழுமையான மானிய விலையில் கொடுக்க முடியாவிட்டாலும், அரசு மானிய விலையில் கொடுப்பதற்கு

2009 பிப்ரவரி 19]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் சார்பாக, மீன்கள் இருக்கும் இடத்தினைக் கண்டுபிடிக்கும் கருவியினை மீனவர்களுக்கு 30 சதவிகித மானியத்துடன் வழங்கும் திட்டத்தினை ஏற்கெனவே அரசு செயல்படுத்தி வருகிறது. மீனவர்கள் இக்கருவியினை வாங்கினால் 30 சதவிகித மானியம் மேற்படி கழகத்தால் வழங்கப்படும். இத்திட்டத்தினைச் செயலாக்கவும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து மீதி 70 சதவிகிதத் தொகையைக் கடனுதவியாகப் பெறவும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கு விரிவான கருத்துரு ஒன்று 2002-ல் அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், மீனவர்கள் எவரும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற ஆர்வம் காட்டாததால் இத்திட்டம் கைவிடப்பட்டது. மேலும், மீன்கள் இருக்கும் இடத்தினைக் கண்டுபிடிக்கும் கருவியினை மீனவர்களுக்கு 30 சதவிகித மானியத்துடன் வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெற மீனவர்கள் ஆர்வம் காட்டாத காரணத்தால் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம் மூலமாக தற்சமயம் இக்கருவி மானிய விலையில் வழங்கப்படவில்லை.

இத்திட்டம் 2007-2008 முதல் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தால் செயல்படுத்தப்படவில்லை. இருப்பினும் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம் வழங்கும் 30 சதவிகிதத் தொகையைப் பெற விருப்பம் தெரிவிக்கும் மீனவர்களிடம் விண்ணப்பங்கள் பெற்று அனுப்புமாறு அனைத்து கடலோர மாவட்ட மீன் துறை உதவி இயக்குநர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் மீனவர்களின் பட்டியல் பெறப்பட்டபின் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் மூலமாக மீன்களைக் கண்டுபிடிக்கும் கருவியை மானிய விலையில் பொருத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

4. அறிவிப்பு

பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் இராஜஸ்தான் சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. On behalf of Members of the Tamil Nadu Legislative Assembly and my own behalf, I extend a warm and hearty welcome to Shri Deependra Singh Shekhawat, Hon'ble Speaker, Rajasthan Legislative Assembly (Thumping of desks) who is now witnessing the proceedings of the Assembly from the Speaker's Gallery.

2. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரையோரமுள்ள மீன்களைப் பிடிப்பதற்கு அனுமதியளித்து கடற்கரை மீனவர்களுக்கு பயிற்சியும் அரசுமூலம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடற்கரை மீனவர்கள் அவ்வாறு மீன் பிடிப்பதற்கு அரசு அதிகாரிகள் கெடுபிடி செய்கின்றார்கள். மீனவர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி மீனவர்களுக்குப் பயிற்சி கொடுத்தவாறு வலைமூலம் மீன் பிடிப்பதற்கு உதவி செய்திட ஏதேனும் திருத்தங்கள் கொண்டு வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே சபையில் இந்தக் கேள்வியை முன்பு கேட்டிருந்தார்கள். நான் அதற்குப் பதிலளித்து இருந்தேன். அந்தப் பகுதியிலே மீனவர்களில் ஒரு தரப்பு வலையை போடுவதற்கும், மற்ற தரப்பு மீன் பிடிப்பதற்கு அந்த வலையைப் போடக் கூடாது என்றும் பிரச்சினையில் இருக்கின்றார்கள். அதற்கு

2009 பிப்ரவரி 19]

ஒரு தனி கமிட்டி அமைத்துப் பரிசீலித்து விரைவில் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கைக்கோள் வழியாக மீனவர்கள் மீன்களைக் கண்டறிந்து பிடிக்கின்ற வகையில், அது உதவிகரமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், மீனவர்களுக்கு இன்றைய latest technology-யின்படி Echo Sounder என்கின்ற அந்தக் கருவி மிக, மிகப் பயன்படுகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே, அந்த Echo Sounder கருவியை வழங்குவதற்கும் அதேநேரத்தில் GPS - Global Positioning System என்று சொல்லக்கூடிய, திசை காட்டும் கருவியை மீனவர்களுக்கு வழங்குவதற்கும் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது? மத்திய அரசு மானியம் வழங்குகின்ற சூழ்நிலையில் எத்தனை மீனவர்களுக்கு இது வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சீர்காழி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும் இதைத்தான் இங்கே கேட்டார்கள். மீன் பிடிப்பதற்கு ஏதுவாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, GPS - Fish Finder மற்றும் Echo Sounder போன்ற கருவிகளை மீனவர்கள் சொந்தமாகவே வாங்கிப் பயன்படுத்தி வருகிறார்கள். அவை பல விலைகளில் கிடைக்கின்றன. அதாவது இரண்டு இலட்சம் ரூபாயில் இருந்து ஐம்பது இலட்சம் ரூபாய் வரை இந்தக் கருவிகள் கடைகளில் விற்கப்படுகின்றன. மீனவர்கள் குறைவாக உள்ள விலையில் உள்ள கருவிகளை வாங்குகின்றனர். அது சரியான முறையிலே இல்லை. வண்ணப் படங்கள் கொண்ட கருவிகள் விலை உயர்வாகவும், கருப்பு-வெள்ளைப் படங்கள் உள்ள கருவிகள் விலை குறைவாகவும் இருக்கின்ற காரணத்தினால், மானிய விலையில் கிடைக்கின்ற அரசு வழங்குகின்ற கருவி விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் 30 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுவதைக்கூட மீனவர்கள் பெறுவதில்லை. ரூ.15 ஆயிரம், ரூ.20 ஆயிரம் என்று குறைவான விலைக்கு கருவிகள் விற்கப்படுகின்ற

காரணத்தால் அவற்றை வாங்கிப் பயன் பெறுகின்றார்கள். எதிர் வருகின்ற காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக் கொண்டதற்கிணங்க, நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞரிடத்திலே எடுத்துச் சொல்லி இதை அவர்கள் எளிதான முறையிலே, நல்ல தரம் வாய்ந்த வண்ணப் படங்கள் உள்ள Fish Finder போன்ற கருவிகளை வழங்குவதற்கு அரசு நிச்சயமாக பரிசீலனை செய்யும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

21—

கலைக் கல்லூரி

***29676—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, தாழையூத்து பகுதியில் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி தொகுதி, தாழையூத்து பகுதியில் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட தாழையூத்து, நாரணபுரம் பேரூராட்சி மற்றும் அதனையடுத்துள்ள மானூர் ஊராட்சி ஒன்றியம், பாளை ஊராட்சியைச் சார்ந்து சுமார் 100 குக்கிராமங்கள் இருக்கின்றன. அவற்றில் கிட்டத்தட்ட 75,000 மக்கள் வசிக்கின்றார்கள். 20 ஆயிரம் மாணவ, மாணவிகள் 20 கிலோ மீட்டர் தூரம் சென்று உயர் கல்வி பயில வேண்டிய ஒரு நிலையில் இருக்கின்றார்கள். எனவே,